05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# CITRA,PERJUANGAN DAN STATUS WANITA DALAM KUMPULAN CERPEN KO.PUNNIAVAN

# கோ.புண்ணியவான் சிறுகதைத் தொகுப்புகளில் பெண்ணியச் சித்தரிப்பு, போராட்டங்கள், வெற்றிகள்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

**SARAVANAN A/L PERUMAL**

**UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS**

**2020**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# CITRA,PERJUANGAN DAN STATUS WANITA DALAM KUMPULAN CERPEN KO.PUNNIAVAN

கோ.புண்ணியவான் சிறுகதைத் தொகுப்புகளில்
பெண்ணியச் சித்தரிப்பு, போராட்டங்கள்,
வெற்றிகள்

SARAVANAN A/L PERUMAL

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

DISERTASI DIKEMUKAKAN BAGI MEMENUHI SYARAT UNTUK MEMPEROLEH
IJAZAH SARJANA SASTERA (KESUSASTERAAN TAMIL)
(MOD PENYELIDIKAN)

FAKULTI BAHASA DAN KOMUNIKASI
UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS

2020

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

UPSI/IPS-3/BO 32
Pind : 00 m/s: 1/1

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS
يونيۏرسيتي ڤنديديقن سلطان ادريس
SULTAN IDRIS EDUCATION UNIVERSITY

Sila tanda (√)
Kertas Projek
Sarjana Penyelidikan √
Sarjana Penyelidikan dan Kerja Kursus
Doktor Falsafah

## INSTITUT PENGAJIAN SISWAZAH

### PERAKUAN KEASLIAN PENULISAN

Perakuan ini telah dibuat pada 11 (hari bulan) 02 (bulan) 2020

**i. Perakuan pelajar :**

Saya, SARAVANAN A/L PERUMAL, M20122001800, FAKULTI BHS DAN KOMUNIKASI (SILA NYATAKAN NAMA PELAJAR, NO. MATRIK DAN FAKULTI) dengan ini mengaku bahawa disertasi/tesis ____ yang ____ bertajuk CITRA, PERJUANGAN DAN STATUS WANITA DALAM KUMPULAN CERPEN KO. PUNNIAVAN ____ adalah hasil kerja saya sendiri. Saya tidak memplagiat dan apa-apa penggunaan mana-mana hasil kerja yang mengandungi hak cipta telah dilakukan secara urusan yang wajar dan bagi maksud yang dibenarkan dan apa-apa petikan, ekstrak, rujukan atau pengeluaran semula daripada atau kepada mana-mana hasil kerja yang mengandungi hak cipta telah dinyatakan dengan sejelasnya dan secukupnya.

Tandatangan pelajar

**ii. Perakuan Penyelia:**

Saya, PROF MADYA DR. SAMIKKANU JABAMONEY (NAMA PENYELIA) dengan ini mengesahkan bahawa hasil kerja pelajar yang bertajuk CITRA, PERJUANGAN DAN STATUS WANITA DALAM KUMPULAN CERPEN KO. PUNNIAVAN (TAJUK) dihasilkan oleh pelajar seperti nama di atas, dan telah diserahkan kepada Institut Pengajian Siswazah bagi memenuhi sebahagian/sepenuhnya syarat untuk memperoleh Ijazah IJAZAH SARJANA SASTERA (KESUSASTERAAN TAMIL) (SILA NYATAKAN NAMA IJAZAH).

21/9/2020
Tarikh

Tandatangan Penyelia



05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS
SULTAN IDRIS EDUCATION UNIVERSITY

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

**INSTITUT PENGAJIAN SISWAZAH /**
***INSTITUTE OF GRADUATE STUDIES***

**BORANG PENGESAHAN PENYERAHAN TESIS/DISERTASI/LAPORAN KERTAS PROJEK**
***DECLARATION OF THESIS/DISSERTATION/PROJECT PAPER FORM***

Tajuk / *Title*: CTRTA, PERTUANGAN, STATUS WANITA DALAM KUMPULAN CERPEN KO.PUNNIAVAN

No. Matrik /*Matric No.*: M20122001800

Saya / *I* : SARAVANAN A/L PERUMAL

(Nama pelajar / *Student's Name*)

mengaku membenarkan Tesis/Disertasi/Laporan Kertas Projek (Kedoktoran/Sarjana)* ini disimpan di Universiti Pendidikan Sultan Idris (Perpustakaan Tuanku Bainun) dengan syarat-syarat kegunaan seperti berikut:-
*acknowledged that Universiti Pendidikan Sultan Idris (Tuanku Bainun Library) reserves the right as follows:-*

1. Tesis/Disertasi/Laporan Kertas Projek ini adalah hak milik UPSI.
   *The thesis is the property of Universiti Pendidikan Sultan Idris*
2. Perpustakaan Tuanku Bainun dibenarkan membuat salinan untuk tujuan rujukan dan penyelidikan.
   *Tuanku Bainun Library has the right to make copies for the purpose of reference and research.*
3. Perpustakaan dibenarkan membuat salinan Tesis/Disertasi ini sebagai bahan pertukaran antara Institusi Pengajian Tinggi.
   *The Library has the right to make copies of the thesis for academic exchange.*
4. Sila tandakan ( √ ) bagi pilihan kategori di bawah / *Please tick ( √ ) from the categories below:-*

| | | |
|---|---|---|
| ☐ | **SULIT/*CONFIDENTIAL*** | Mengandungi maklumat yang berdarjah keselamatan atau kepentingan Malaysia seperti yang termaktub dalam Akta Rahsia Rasmi 1972. / *Contains confidential information under the Official Secret Act 1972* |
| ☐ | **TERHAD/*RESTRICTED*** | Mengandungi maklumat terhad yang telah ditentukan oleh organisasi/badan di mana penyelidikan ini dijalankan. / *Contains restricted information as specified by the organization where research was done.* |
| ☑ | **TIDAK TERHAD / *OPEN ACCESS*** | |

(Tandatangan Pelajar/ Signature)

(Tandatangan Penyelia / *Signature of Supervisor*) & (Nama & Cop Rasmi / *Name & Official Stamp*)

Tarikh: 21/9/2020.

Catatan: Jika Tesis/Disertasi ini **SULIT @ TERHAD**, sila lampirkan surat daripada pihak berkuasa/organisasi berkenaan dengan menyatakan sekali sebab dan tempoh laporan ini perlu dikelaskan sebagai **SULIT** dan **TERHAD**.

*Notes: If the thesis is CONFIDENTAL or RESTRICTED, please attach with the letter from the related authority/organization mentioning the period of confidentiality and reasons for the said confidentiality or restriction.*

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## நன்றி நவில்தல்


என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாக தமிழ்ச் செய்யுமாறு

கோ.புண்ணியவான் சிறுகதைகளில் பெண்ணியம் என்ற தலைப்பில் ஆய்வு செய்ய வாய்ப்பும் அமைதியும் அளித்த சுல்தான் இட்ரீஸ் ஆசிரியர் கல்விக் கழகத்திற்கு எனது முதற்கண் வணக்கம். எமது இச்சிறு முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அரவணைப்பும் அவ்வப்போது தந்து இவ்வாய்வேடு நன்முறையில் அமைந்திட வழிகாட்டிய மதிப்புமிகு நெறியாளர் ஐயா சாமிக்கண்ணு ஜெபமணி அவர்களுக்கு உளப்பூர்வமான நன்றி மலர்களைச் சமர்ப்பிக்கின்றேன். இவ்வாய்வேட்டினைச் செம்மையுறச் செய்ய அவ்வப்போது உதவி கரம் நீட்டிய எனது அன்பிற்குரிய மனைவி திருமதி பாக்கியலட்சுமி அவர்களுக்கு மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். இவ்வாய்வேடு பூர்த்தியாகப் பெரிதும் உதவிய என் உடன் பிறவா சகோதரி திருமதி நாகராணி அவர்களையும் குமாரி மகேஸ்வரி இளையராணி அவர்களையும் நினைவுகூர்வதில் நான் பெருமிதம் கொள்கின்றேன். மேலும், இவ்வாய்வேட்டினைச் சிறப்புற செய்து முடிக்க பல வகைகளில் அர்பணித்த தேசா பிஞ்சி தமிழ்ப்பள்ளி ஆசிரியர்களுக்கும் தஞ்சோங் ரம்புத்தான் தமிழ்ப்பள்ளி தலைமையாசிரியர் திருமதி சுந்தரி அவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் எனது நெஞ்சார நன்றியினைச் சமர்ப்பிக்கின்றேன்.


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## ஆய்வின் சாரம்

இவ்வாய்வின் நோக்கமானது கோ.புண்ணியவானினது சிறுகதைகளில் பெண்ணியச் சித்தரிப்பை அடையாளம் காணுதல், பெண்ணியப் போராட்டங்களைப் பகுத்தாய்தல், பெண்ணியம் அடைந்த வெற்றிகளை விளக்குதலாகும். இவ்வாய்வானது பண்புசார், நூலாய்வு அடிப்படையில் கலாச்சாரப் பெண்ணியக்கோட்பாட்டின் அடிப்படையில் பகுத்தாயப்பட்டுள்ளது. கலாச்சாரப் பெண்ணியம் 'பிரோக் வில்லியம்' என்பவரால் 1975இல் தொடங்கப்பட்டது. கலாச்சாரப் பெண்ணியமானது மரபு கலாச்சாரத்திற்கு மாறுதலாக, பெண்கள் புதிய கலாச்சாரத்தை உருவாக்கிக் கொள்ளவும் தங்களின் திறமைகளை வெளிக்காட்டவும் தோற்றம் கண்டது. கோ.புண்ணியவானின் மூன்று சிறுகதைத் தொகுப்புகளான *சிறை*, *நிஜம்*, *எதிர்வினைகள்* ஆகியவற்றுள் இடம்பெற்ற 48 சிறுகதைகள் ஆய்வுப் பொருளாகத் தெரிவுச் செய்யப்பட்டன. இருப்பினும், அவற்றுள், 17 சிறுகதைகள் மட்டுமே ஆய்வுக்குப் பொருத்தமானதாக அமைந்துள்ளன. கோ.புண்ணியவான், மலேசிய புகழ்பெற்ற பெண்ணியச் சிந்தனை எழுத்தாளராகக் கருதப்படுவதால் அவரின் சிறுகதைகள் ஆய்வுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இச்சிறுகதைகளில் பெண்ணியச் சித்தரிப்பு, அவர்களின் போராட்டங்களும் வெற்றிகளும், பெண் மனைவியாக ஐந்து சிறுகதைகளிலும், தாயாக 4 சிறுகதைகளிலும், காதலியாகவும் வேலைக்காரியாகவும் தலா 2 சிறுகதைகளில் சித்தரிக்கப்பட்டுள்ளன. மேலும், மகளாகவும் அக்காளாகவும், நடிகையாவும், தனித்து வாழும் தாய்மாராகவும் தலா ஒரு சிறுகதையில் சித்தரிக்கப்பட்டுள்ளன. இச்சிறுகதைகளில் காணும் பெண்களின் கலாச்சாரப் பெண்ணியச் சித்தரிப்பினையும் அவர்கள் எதிர்நோக்கிய பெண்ணியப் போராட்டங்களையும் அதில் அவர்கள் கண்ட வெற்றிகளையும் இவ்வாய்வு வெளிப்படுத்தியுள்ளது. இவ்வாய்வின் மூலம் மலேசியப் பெண்களிடம் கலாச்சாரப் பெண்ணியம் தொடர்ந்து நிலைத்திருப்பதைக் காண முடிகிறது. அத்துடன், குடும்பம், சமுதாயம் ஆகிவற்றில் பெண்ணின் பங்களிப்பைப் பற்றி நன்கு புரிந்து கொள்ளவும் அவர்கள் சுயகாலில் நிற்பதற்கு வருங்காலத்தில் கொள்கை உருவாக்குபவருக்கு இவ்வாய்வு வழிகாட்டியாக அமையும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**CITRA, PERJUANGAN DAN STATUS WANITA DALAM KUMPULAN CERPEN KO.PUNNIAVAN**

## ABSTRAK

Kajian ini bertujuan untuk mengenal pasti citra wanita, menganalisis perjuangan wanita dan menghuraikan status wanita dalam kumpulan cerpen Ko.Punniavan. Oleh itu, pendekatan kualitatif yang merangkumi kaedah kepustakaan dan kaedah analisis teks di samping teori feminisme budaya yang dipelopori oleh Brooke Williams pada tahun 1975 digunakan untuk menjalankan kajian ini. Feminisme budaya ialah fahaman bahawa wanita akan mencapai emansipasi melalui budaya wanita alternatif. Dapatan kajian mendapati bahawa hanya sebanyak 17 buah cerpen daripada 48 cerpen yang telah diterbitkan dalam tiga buah kumpulan cerpen Ko.Punniavan berjudul *Nijam*, *Cirai*, *Ethirvinaikal* mencerminkan feminisme budaya. Cerpen-cerpen tersebut dipilih sebagai korpus kajian kerana penulisnya Ko. Punniavan merupakan seorang penulis feminis yang popular di Malaysia. Dalam 17 buah cerpen tersebut, aspek citra, perjuangan dan status kaum wanita dapat dikesan pada watak isteri dalam lima buah cerpen, ibu dalam empat buah cerpen, kekasih serta pekerja wanita masing-masing dalam dua buah cerpen dan anak perempuan, kakak, pelakon wanita dan ibu tunggal masing-masing dalam sebuah cerpen. Kesemua wanita tersebut dicitrakan sebagai watak yang bersifat mematuhi ciri-ciri feminisme budaya; diemansipasikan sebagai pejuang untuk mencapai kejayaan dan status sebagai wanita yang berjaya dalam perjuangan mereka. Kesimpulan kajian ini menunjukkan bahawa ciri-ciri feminisme budaya masih kukuh dalam kalangan wanita kaum Tamil Malaysia. Implikasi kajian ini berfaedah kepada penggubal dasar pada masa hadapan yang dapat memahami peranan wanita dalam keluarga dan masyarakat di samping membantu mereka berdikari.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**IMAGE, EMANCIPATION AND STATUS OF WOMEN IN THE ANTHOLOGY OF SHORT STORIES KO.PUNNIAVAN**

## ABSTRACT

This research aims at identify the image of women, analyse their emancipation and describe their status as portrayed in the anthology of shorts stories by Ko.Punniavan. The qualitative approach, namely library research method and text analysis method based on the theory of cultural feminism, introduced by Brooke Williams in 1975 was used to carry out this study. Cultural feminism is of the belief that women can freed via an alternative women's culture. The findings show that from 48 short stories published in three anthologies of short stories, only 17 short stories reflect the theory of cultural feminism. These short stories were chosen as a corpus of research because the author Ko.Punniavan is a popular feminist writer in Malaysia. Of the short stories, the image, emancipation and status of women can be seen from a daughter in one short story, as a sister in another short story, as wives in five other short stories, as mothers in four short stories, as lovers in two short stories, as actress in one short story, as labourers in two short stories and as a single mother in one short story. All of these women are characterized as conforming to cultural feminism; as struggling to be emancipated; and as attaining the status of successful women their struggles. The conclusion of this study shows that the characteristics of cultural feminism are still strong among the Tamil women in Malaysia. Implications of this study are beneficial to policymakers to understand the role of women in their families, communities, thus helping them to be independent in the future.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## பொருளடக்கம்


பக்கம்

**ஆய்வாளர் உறுதிமொழி** ii

**நன்றியுரை** iv

**ஆய்வுச் சாரம்** v

**ஆய்வின் சுருக்கம்(மலாய் மொழி)** vi

**ஆய்வின் சுருக்கம்(ஆங்கிலம்)** vii

**பொருளடக்கம்** viii

**அட்டவணைப் பட்டியல்** xiii

**வரைப்படம் பட்டியல்** xiv

**குறிவரைவு பட்டியல்** xv

**இயல் 1 அறிமுகம்**

1.1 முன்னுரை 1

1.2 ஆய்வுப் பின்னணி 4

1.2.1 மலேசியாவில் சிறுகதை வளர்ச்சி 8

1.3 ஆய்வின் சிக்கல் 9

1.4 ஆய்வின் முக்கியத்துவம் 12

1.5 ஆய்வு நோக்கம் 13

1.6 ஆய்வின் வினா 14

1.7 ஆய்வின் எல்லை 14


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


1.8 ஆய்வின் சான்றாதாரம் 17

1.8.1 முதன்மைச் சான்றாதாரம் 17

1.8.2 துணைமைச் சான்றாதாரம் 17

1.9 கலைச்சொல் விளக்கம் 18

1.9.1 பெண்ணியம் 18

1.9.2 சிறுகதை 22

1.10 தொகுப்புரை 24

**இயல் 2 முந்தைய ஆய்வுகள்**

2.1 முன்னுரை 25

2.2 பெண்ணியம் 27

2.2.1 தாராளப் பெண்ணியம் 29

2.2.2 சமதர்ம பெண்ணியம் 30

2.2.3 தீவிரவாதப் பெண்ணியம் 31

2.2.4 ஆன்மீகப் பெண்ணியம் 32

2.2.5 கலாச்சாரப் பெண்ணியம் 33

2.3 சிறுகதை 34

2.3.1 சிறுகதை வரலாறு 34

2.3.2 தமிழ்ச் சிறுகதை வரலாறு 36

2.3.3 மலேசியத் தமிழ்ச் சிறுகதை வரலாறு 37

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


2.4 எழுத்தாளர் ஆசிரியர் கோ.புண்ணியவான் 38

2.5 முந்தைய ஆய்வுகள் 39

2.6 ஆய்வுக்குத் தொடர்புடைய நூல்கள் 54

2.7 தொகுப்புரை 56

**இயல் 3 ஆய்வு நெறிமுறை**

3.1 முன்னுரை 58

3.2 ஆய்வு வடிவமைப்பு 59

3.3 ஆய்வுக் கட்டமைப்பு 60

3.4 ஆய்வு அணுகுமுறை 61

3.4.1 நூலாய்வு முறை 61

3.4.2 விளக்கமுறை ஆய்வு 62

3.5 தரவு பகுப்பாய்வு முறை 63

3.6 தரவு சேகரிப்பு முறை 64

3.6.1 தரவு வாசிப்பு 64

3.6.2 தரவுத் தெரிவு 65

3.6.3 தரவு வகைப்பாடு 65

3.7 ஆய்வுக் கோட்பாடு 66

3.8 கோட்பாடு வடிவமைப்பு 70

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



3.9 தொகுப்புரை 71

**இயல் 4 ஆய்வு முடிவு**

4.1 முன்னுரை 72

4.2 மகள் 73

4.3 அக்கா 82

4.4 மனைவி 87

4.5 தாய் 116

4.6 காதலி 132

4.7 நடிகை 142


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


4.8 வேலைக்காரி 147

4.9 தனித்து வாழும் தாய்மார்கள் 154

4.10 தொகுப்புரை 160

**இயல் 5 முடிவுரை**

5.1 முன்னுரை 162

5.2 ஆய்வு முடிவுகள் 162

5.2.1 கோ.புண்ணியவானின் சிறுகதைகளில் பெண்ணியச் சித்தரிப்பு 164

5.2.2 கோ.புண்ணியான் சிறுகதைகளில் பெண்ணியப் போராடங்கள் 167

5.2.3 கோ.புண்ணியவான் சிறுகதைகளில் பெண்ணியம் 171


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


அடைந்த வெற்றிகள்

5.3 தொடர் ஆய்வுப் பரிந்துரை 175

5.4 தொகுப்புரை 178

**துணை நூற்பட்டியல்** 180

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## அட்டவணைப் பட்டியல்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1.1 | கோ.புண்ணியவான் சிறுகதைத் தொகுப்புகளிலிருந்து ஆய்வுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதைகளின் பட்டியல் | 16 |
| 4.1 | பெண் மகளாகச் சித்தரிக்கப்பட்ட பெண்ணின் போராட்டமும் வெற்றியும் | 73 |
| 4.2 | அக்காளாகச் சித்தரிக்கப்பட்ட ஒரு பெண்ணின் போராட்டமும் வெற்றியும் | 82 |
| 4.3 | மனைவியாகச் சித்தரிக்கப்பட்ட ஒரு பெண்ணின் போராட்டமும் வெற்றியும் | 88 |
| 4.4 | தாயாகச் சித்தரிக்கப்பட்ட பெண்களின் போராட்டமும் வெற்றியும் | 117 |
| 4.5 | காதலியாகச் சித்தரிக்கப்பட்ட பெண்களின் போராட்டமும் வெற்றியும் | 132 |
| 4.6 | நடிகையாகச் சித்தரிக்கப்பட்ட பெண்களின் போராட்டமும் வெற்றியும் | 142 |
| 4.7 | வேலைக்காரியாகச் சித்தரிக்கப்பட்ட பெண்களின் போராட்டமும் வெற்றியும் | 147 |
| 4.8 | தனித்து வாழும் தாய்மாராகச் சித்தரிக்கப்பட்ட பெண்ணின் போராட்டமும் வெற்றியும் | 156 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## வரைபட பட்டியல்


| எண் | பக்கம் |
|---|---|
| 3.1 ஆய்வுக் கட்டமைப்பு | 60 |
| 3.2 கோட்பாட்டு வடிவமைப்பு | 70 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## குறிவரைவு பட்டியல்


| எண் | பக்கம் |
|---|---|
| 4.1 தனித்து வாழும் தாய்மார்களின் எண்ணிக்கை | 155 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# இயல் 1

# அறிமுகம்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.1 முன்னுரை

இலக்கியத்துறை 18ஆம் நூற்றாண்டிலிருந்து வளர்ச்சியடையத் தொடங்கியது. இருப்பினும், உலக மொழிகளுள் காலத்தால் வரையறுக்கப்படாததும் மூத்த உயர்தனிச் செம்மொழியாய் விளங்குவதும், அமிழ்தினும் இனிய தமிழ்மொழியேயாகும். ஆகவே, இத்தகைய தொன்மைச் சிறப்புமிக்க தமிழ்மொழி, சிறந்ததொரு நீண்ட இலக்கிய வரலாற்றையும் மரபையும், வற்றாத இலக்கியச்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


செல்வத்தையும் தன்னத்தே கொண்டது. தமிழ் இலக்கியமானது கி.மு. மூன்றாவது நூற்றாண்டிற்கு முன்பே எழுத்துச் சான்றைக் கொண்டுள்ளது (கலியபெருமாள், க. 2005). அதுமட்டுமின்றி**,** ஆகவே, இலக்கியம் ஓரினத்தின் சமூக வாழ்வின் பிரதிபிம்பம் ஆகும்.

இவ்விலக்கியம் தனக்கென்று ஓர் அடையாளத்தைக் கொண்டு இயங்குவதற்குக் காரணம் அதன் சமூகவியல் தன்மையே என்பதனை Umar Junus, (1986**),** அவர்களின் இலக்கியப் படைப்பில் காணமுடிகின்றது.

வாழ்க்கை என்பது பல்வேறு போராட்டங்களும் சவால்களும் நிறைந்தது. ஆணாக இருப்பினும், பெண்ணாக இருப்பினும் பல சமூகச் சிக்கல்களைச் சமாளிக்க நேர்கிறது. எனவே, ஆய்வாளர் சமூகவியலோடு தொடர்புடைய பெண்ணியச் சிந்தனையை மையமாகக் கொண்ட இலக்கியப் படைப்பினை ஆய்வு செய்துள்ளார். பெண்ணியம் எனப்படுவது சமூகவியல்**,** அரசியல்**,** ஒழுக்கவியல் அல்லது நன்னடத்தை ஆகியவற்றின் கலவையாகப் பெண் விடுதலையை மையமாகக் கொண்டியங்குகிறது. இவற்றை ஆய்வு செய்ய ஆய்வாளர் எடுத்துக் கொண்ட இலக்கிய வகை சிறுகதையாகும்.

சிறுகதை எனப்படுவது வாசகர்கள் மத்தியில் மிகவும் பிரபலமாக விளங்கி வருகின்ற ஓர் இலக்கிய வகையாகும் (genre). சிறுகதை என்பது சுருக்கமாகக்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


கதை கூறும் புனைவுவகை உரைநடை இலக்கியமாகும். பொதுவாக, ஒரு மையக்கரு அல்லது ஒரு நிகழ்ச்சியின் அனுபவத்தை மையமாகக் கொண்டு மிக எளிய முறையில் மனித வாழ்வியலை விவரிக்கும் இலக்கிய வகையாகும்.

சிறுகதைக்கென சில கூறுகள் உள்ளன. அந்தக் கூறுகளை அடிப்படையாகக் கொண்டே சிறுகதைகள் அமைகின்றன. கருப்பொருள், துணைக்கரு, கதைமாந்தர், பின்னணி, பண்புக்கூறு, நோக்கு நிலை, படிப்பினை ஆகியன சிறுகதையின் கூறுகள் எனலாம். இவை அனைத்தும் சேர்ந்ததே சிறுகதையின் வடிவமாகும் (சிவத்தம்பி, க. 1980).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

ஆகவே, இதன் அடிப்படையில் கோ.புண்ணியவான் அவர்களின் சிறுகதையில் சித்தரிக்கப்படும் பெண்ணியத்தை ஆய்வாளர் ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளார். எழுத்தாளர் கோ.புண்ணியவானின் சிறுகதைகளில் மொழி, கருப்பொருள், துணைக்கரு ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், கதைமாந்தார்களாக உலாவரும் பெண்களின் சிந்திக்கும் ஆற்றலையும் சமூகத்தில் அவர்களின் நிலையினையும் புரிந்து கொள்ள முடிகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.2 ஆய்வுப் பின்னணி

ஆய்வுப் பின்னணியில் மலேசியச் சிறுகதையின் வளர்ச்சியும் கோ.புண்ணியவானின் சிறுகதையும் விளக்கப்பட்டுள்ளன.

### 1.2.1 மலேசியாவில் சிறுகதை வளர்ச்சி

சிறுகதை எனும் இலக்கிய வகை உருவாகக் காரணமாக இருந்த முன்னோடிகளுள் குறுப்பிடத்தக்கவர் எட்கார் ஆலன் போ (Edgar Allen Poe) என்ற அமெரிக்கராவர். சிறுகதைகளை நீண்ட கதைகளிலிருந்து இனம் பிரித்தறிய 1842இல் இவர் சில கொள்கைகளை வகுத்தார். அவரின் கூற்றுப்படி, சிறுகதையானது அரை மணியிலிருந்து இரண்டு மணி நேரத்திற்குள், ஒரே அமர்வில் படித்துவிட முடிகின்ற அளவிற்கான நீளத்தைப் பெற்றிருக்கவேண்டும் என்றார் (சுப்பிரமணி, சோ. 2005).

எட்கார் ஆலன் போவிற்குப் பிறகு, பிரேன்டர் மெத்யூஸ் (Brander Mathews) 1885இல் சிறிய(short), கதை (story) ஆகிய சொற்களை இணைத்து சிறுகதை (short story) என்ற சொல்லை உருவாக்கினர் (சுப்பிரமணி, சோ. 2005).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


சிறுகதைக்கு ஒரு கால எல்லை இல்லை என்பது ஒரு கருத்து. ஒருவரது பிறப்பு முதல் இறப்பு வரை சிறுகதையின் காலமாய் இருக்க முடியும் அல்லது ஒருவரின் வாழ்க்கையில், ஒரே நாளில், ஒரு மணியில், சில விநாடிகளில்கூட கதை முடிந்துவிடலாம். அத்துடன், அக்கதையின் நீளமானது 500 சொற்களிலிருந்து 20,000 சொற்களுக்குள் ஒரு கதைப்பின்னல், ஒரு கதைமாந்தர், ஒரு விளைவு அடங்கியிருக்கும் என அ. பக்கார் அமிட் கூறியுள்ளார் (A. Bakar Hamid, 1980).

மேலும், பல இலக்கியவாதிகள் சிறுகதைக்கான பல்வேறு விளக்கங்களைத் தந்துள்ளனர். அவற்றில் சிலர், ஒருவருக்கொருவர் முரண்பட்ட கருத்து உடையவர்களாகவும் மற்றும் சிலர் ஒத்த கருத்துடையவர்களாகவும் உள்ளனர். இருப்பினும், சிறுகதை எனப்படுவது குறைந்த கால, நீள அளவிலான ஒரு கற்பனைக் கதை என்பதை அனைவரும் ஒப்புக்கொள்கின்றனர்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இப்படி ஐரோப்பாவில் தொடங்கிய இந்த இலக்கிய வகையானது, மேற்கத்திய தொடர்பால், பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியத் துணைக்கண்டத்திற்குள் நுழைந்தது. வீரமாமுனிவரின் முயற்சியால் தமிழகத்தில் தமிழ்ச் சிறுகதையாக ஒரு மரபை வளர்த்துக் கொண்டு, அங்கிருந்து எல்லாத் தமிழ்க்கூறும் நல்லுலகிற்கும் பயணமாகியது (வரதராசன், மு. 2004).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


மலேசியாவில் இந்தத் தமிழ்ச் சிறுகதையின் பயணமானது, இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தொடங்கியதாக இலக்கிய ஆய்வாளர்கள் கருதுகின்றனர். மலேசியாவின் முதல் சிறுகதையாகக் கருதப்படுவது 1930ஆம் ஆண்டில் வே.சின்னையா என்பவரால் சிங்கையில் அச்சிடப்பட்ட நவரச கதா மஞ்சரியில் ‘இவை இனிய அற்புதக் கதைகள்’ என்ற ஐந்து சிறுகதைகளைக் கொண்ட தொகுப்பேயாகும்(செல்வராஜு, என். 2003). எனினும், இந்தக் கால நிர்ணயத்தில் பல இலக்கியவாதிகள் முரண்படுகின்றனர் என்ற கருத்தும் நிலவுகின்றது. இதனைத் தொடர்ந்து, 1930ஆம் ஆண்டுகளின் இறுதியில், சிந்தாமணி மாத இதழில் சதாசிவத்தின் ‘பேராசை பெரு நட்டம்’, பாலம்மாவின் ‘கமலாம்பிகையின் கணக்கு’, சிரிமதியின் ‘ரங்கனின் இரகசியச் செயல்’ போன்றவை வெளிவந்தன (காவேரி, கி. 2005).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தொடக்கக் காலத்தில், மலேசியாவில் வெளிவந்த சிறுகதைகள் தமிழகச் சமூக வாழ்க்கையும் சிக்கல்களையும், இந்தியச் சுதந்திரத்தையும் கருப்பொருளாகக் கொண்டு எழுதப்பட்டன. ஆனால், காலப்போக்கில் மலேசிய வாழ்க்கை முறையும் எழுத்தாளர்களின் கதைக் கருக்களாக உருவெடுத்தன. அவ்வகையில் சமகாலச் சிக்கல்களைக் கதைகளில் கொண்டு வந்து விவாதிப்பதில் எழுத்தாளர்கள் அதிகம் ஆர்வம் காட்டினர். தமிழர்களை இங்கு சஞ்சிக் கூலிகளாகக் கொண்டு வந்த வாழ்க்கை, சப்பானியர் காலத்தில் அரங்கேறிய கொடுங்கோல்கள், நாடு சுதந்திரத்தை நோக்கிப் பயணிக்கின்ற சுழலில் எந்த நாட்டைத் தேர்ந்தெடுப்பது என்ற தவிப்பில் இருந்த தமிழர்கள் தோட்டத்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


துண்டாடலால் அனாதையாக வீதியில் விடப்பட்ட வாழ்க்கை, மே கலவரத்தால் சமுதாயத்தில் ஏற்பட்ட விளவுகள், குடியுரிமைப் பெறாமல் வாழ்ந்த நிலையில் சிவப்பு நிற அடையாள அட்டையால் வந்த சோதனைகளும் வேதனைகளும், மதுப்பழக்கத்தினால் ஏற்பட்ட சமூகப் சிக்கல்களும் கள்ள சம்சு ஏற்படுத்திய மரண ஓலங்களும், மேம்பாட்டுத் திட்டங்களினால் திடீரென்று தோட்டப்புறங்களிலிருந்து புறநகர்களுக்கு அனாதைகளாகத் தள்ளப்பட்ட நிலையில் எதிர்நோக்கிய சவால்களும் சமூக பொருளாதாரப் பிரச்சனைகளும், இன்றைய புதிய மலேசியாவில் சமூகவியல், பொருளாதாரம், அரசியல் போன்ற துறைகளில் எதிர்நோக்கும் சவால்கள் என்று பன்முகப் பார்வையாக மலேசியத் தமிழர்களின் வரலாற்றினைத் தொகுத்துக் கூறும் வகையில் கதைக்கருக்கள் அமைந்து தமிழ்ச்சிறுகதைகள் மலேசியப் படைப்புலகிற்கு வளம் சேர்த்துள்ளன. இப்படிபட்ட மலேசியச் சிறுகதையானது ஏறக்குறைய எண்பது ஆண்டுகால வரலாற்றை உடையது (கிருஷ்ணன், 2009).

எழுபதுகளில் மலேசியாவின் தமிழ்ச் சிறுகதைகள் நிலைப்பெற்றிருக்கின்றன என இலக்கிய ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். இவை சிறந்த எழுத்துப்படைப்பிற்கு வித்திட்டன (Subramaniam, 1980). உலகெங்கிலும் பெண்களுக்கு ஏற்பட்ட அவலங்கள், கொடுமைகள் ஆகியவையே இத்துரித இலக்கிய வளர்ச்சிக்கு முக்கியக் காரணமாகும். எழுத்துப் படைப்பின் மூலம் மக்களுக்குப் பெண்ணிய விழிப்புணர்வை ஏற்படுத்த படைப்பாளர்கள் பலர் எழுச்சிக் கொண்டனர். பெண்களை விளையாட்டுப் பொருளாகவும் அடிமையாகவும் எண்ணும் கயவர்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதோடு, பெண்ணியத்தைக் காக்க வேண்டும் என்பதே அந்தப் படைப்பாளர்களின் முக்கிய குறிக்கோள். அத்தகைய எழுத்தாளர்களுள் ஒருவர்தான் கோ.புண்ணியவான்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


### 1.2.2 கோ.புண்ணியவான் பின்னணி

கோ.புண்ணியவான் அவர்கள் கிளந்தானில் பிறந்தவர். தனது ஆசிரியர் பணியை மேற்கொள்ள கெடா மாநிலத்தின் சுங்கை பட்டாணிக்கு இடம் பெயர்ந்தார். இவர் முன்னாள் தலைமையாசிரியரும் ஆவார். இவர் மூன்று சிறுகதைத் தொகுப்புகளையும் 2008இல் நொய்வப் பூக்கள் என்ற ஒரு புதினத்தையும் படைத்துள்ளார். 2013ஆம் ஆண்டு செலஞ்சார் அம்பாட் என்ற நாவலை இயற்றினார். இந்நாவலுக்காக டான்ஸ்ரீ சோமா அறவாரியத்தின் 10,000 டாலர் பரிசினைப் வென்றார். தொடர்ந்து அஃடோபஸ் கவிதைகளும் அடர்ந்த கவித்தமும் என்ற நூலையும் எழுதியுள்ளார். அது மட்டும் இன்றி, பேயோட்டி, வன தேவதை போன்ற சிறுவர் நாவல்களையும் எழுதியிருப்பது குறிப்பிடத்தக்கது. இவற்றைத் தவிர்த்து, மேலும் இலக்கியப் படைப்புகள் சில கவிதைகளையும் படைத்துள்ளார். இவர் தனது சிறுகதைப் படைப்புகளுக்காகத் தேசிய விருதுகளையும் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது (www.vallinam.my).

கோ.புண்ணியவான் தனது 20ஆம் வயதில் எழுத்துப் படைப்பினை வழங்க ஆரம்பித்தார். இவரின் இந்தச் சேவையானது இன்று இவர் அறுபது வயதை எட்டியும் இன்னும் தொடர்ந்து கொண்டுதான் வருகின்றது. இவர் தனது 60ஆவது வயதிலும் பல இலக்கியப் படைப்புகளைத் தொடர்ந்து இந்தச் சமுதாயத்திற்கு வழங்கி வருவதானது, இவரின் இலக்கிய ஆர்வத்தையும் தமிழ் மீது கொண்ட பற்றையும், மேலும் இந்தச் சமுதாயத்தின் மீது இவர் கொண்ட அக்கறையையும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


பிரதிபலிக்கிறது. இவரின் படைப்புகள் யாவும் மலேசிய இந்தியர்களுக்கு நன்மையைக் கொண்டு வந்துள்ளது **(**www.vallinam.com.my**).**

கோ.புண்ணியவான் தனது சிறுகதைகளைப் பல கோணங்களில் நமக்குப் படைத்துள்ளார். அவை உணர்வுப் பூர்வமாக பெண்ணியம் பற்றிய சிந்தனைகளை வெளிப்படுத்தியுள்ளதைக் காணலாம். இவரின் கவிதைளும்கூட ஆழ்ந்த கருத்துகளைக் கொண்டதாகவே அமைந்துள்ளன. ‘ஆஸ்ட்ரோ’ நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற கவிதைப் போட்டிகளில் இவரின் கவிதைகள் பரிசுகளை வென்றுள்ளன. அதுமட்டுமின்றி, மலாயாப் பல்கலைக்கழகம் நடத்தும் ‘தமிழ்ப்பேரவைக் கதைகள்’ போட்டிகளிலும் பரிசுகளை வென்றுள்ளார். அத்துடன், இவரது சிறுகதைகள் மலாய்மொழியிலும் ஆங்கில மொழியிலும் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன. இதன்வழி, கோ.புண்ணியவானின் சிறந்த படைப்பாற்றல் திறத்தினை நம்மால் அறிந்து கொள்ள முடிகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.3 ஆய்வுச் சிக்கல்

பெண்களுக்குக் குடும்பம் மற்றும் சமூகத்தினரால் நேரும் அவலநிலைகள், சவால்கள், சிக்கல்களை அடையாளம் கண்டு, அவற்றைக் களையும் வழிமுறைகளையும் கண்டறிந்துள்ளார். மேலும், கோ.புண்ணியவானின்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


படைப்புகளில் காணப்படும் இந்தியப் பெண்களின் கலாச்சார மரபும் பெண்களைப் பற்றிய படைப்பாளரின் பார்வையும் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

கோ.புண்ணியவானின் சிறுகதையில் காணப்படும் பெண்ணியச் சிந்தனையைப் பற்றி எந்த ஆய்வும் இதுவரையில் மலேசியாவில் மேற்கொள்ளப்படவில்லை. இதன் காரணமாகவே, ஆய்வாளர் கோ.புண்ணியவானின் சிறுகதையில் சித்திரிக்கப்பட்டுள்ள பெண்ணியத்தைத் தேர்ந்தெடுத்துள்ளார். குறிப்பாக, பெண்களின் பண்புநலன்கள், பாத்திரப்படைப்பு, பெண்களைப் பற்றிய எழுத்தாளரின் பார்வை ஆகியவற்றை ஆய்வு செய்துள்ளார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

கோ.புண்ணியவானின் சிறுகதை படைப்புகளில், பெண்களின் பாத்திரப்படைப்புகளும், பண்புநலன்களும் பெண்ணியத்தைப் பற்றிய எழுத்தாளரின் பார்வையும் வெளிப்படையாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன. மேலும், கோ.புண்ணியவான் தனது சிறுகதைகளில் மலேசிய இந்தியப் பெண்களின் சிந்தனை, நடை, உடை, பாவனை, உரிமைக்காகக் குரல் எழுப்புதல் போன்ற பண்புகளைத் தமிழகப்பெண்களுடன் உள்ள வேறுபாட்டினை ஒப்பிட்டுக் கூறியுள்ளார். இதன் காரணமாகவே, ஆய்வாளர் கோ.புண்ணியவான் சிறுகதைகளில் வெளிப்படும் பெண்களின் கதைபாத்திரங்களைத் தேர்ந்தெடுத்துள்ளார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


கோ.புண்ணியவானின் படைப்பில் பெண்களின் குணாதியசயங்கள் மிகத் துள்ளியமாகவும் மலேசிய இந்தியச் சமூகத்தினருக்கு ஏற்ற முறையில் அமைந்துள்ளன. மலேசிய இந்தியப் பெண்களின் வாழ்க்கை முறை, நம்பிக்கை, கலாச்சாரம், உடை ஆகியவை தமிழகத்துப் பெண்களை விட மாறுபட்டுள்ளன என்பதனை தனது சிறுகதையான 'சிறை' மூலம் கூறுகின்றார். திருமணமான ஒரு பெண், தனது கணவன் விபத்திற்குள்ளாகும் முன் அவனால் நேர்ந்த துன்பத்தையும், அவன் விபத்திற்குப் பின் அவள் எதிர்கொள்ள வேண்டிய சவால்களையும் நம் கண் முன் கொண்டு வந்துள்ளார் கோ.புண்ணியவான்.

விபத்திற்குப் பின், தனது மனைவியின் உதவியை முழுக்க நாடும் கணவனின் மனமாற்றத்திற்குக் காரணமாக விளங்கும் ஒரு பெண்ணின் தியாகத்தையும் சவால் நிறைந்த வாழ்கையையும் எழுத்தாளர் கோ.புண்ணியவான் திறம்பட சித்தரித்துள்ளார். உள்ளுணர்வாலும் சொல்லாலும் பெண்மையின் தியாகத்தை இச்சிறுகதையின்வழி எழுத்தாளர் கொண்டு சென்றுள்ளார்.

இன்றைய பெண்களின் எண்ணங்களையும் உணர்வுகளையும், அவர்களின் நிலையினையும் அறிந்து கொள்வது சற்றுக் கடினமாக இருப்பினும், இதனை ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டு, இந்தியப் பெண்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள சிக்கலை அடையாளம் கண்டுகூறும் ஒரு வாய்ப்பாக இந்த ஆய்வைக் கருதுகிறார் ஆய்வாளர். மேலும், இந்தச் சிறுகதை ஆய்வானது மலேசிய இந்தியப் பெண்களின்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


நிலையினைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகவும் திகழலாம் என ஆய்வாளர் கருதுகிறார்.

## 1.4 ஆய்வின் முக்கியத்துவம்

மேலும், இது ஆய்வாளருக்கும் வாசகர்களுக்கும் சிறந்த விளைபயனைத் தருவதுமட்டுமின்றி, நன்மையையும் பயக்கும். பிற இலக்கியப் படைப்புகள் போலவே சிறுகதை இலக்கியமும் ஒழுக்க நெறியையும் சமூக நீதியையும் வலியுறுத்துகின்றது. கோ.புண்ணியவான் சிறுகதைகளில் பெண்ணியச் சிந்தனையையும் பெண்ணிய அவலநிலையையும் காணமுடிகின்றது. எடுத்துக்காட்டாக, பெண்களுக்கு எதிரான பாலியல் கொடுமை, வன்முறை, பெண்களை அடிமைப்படுத்துதல் போன்றவை கோ.புண்ணியவானின் சிறுகதைகளில் வெளிப்பட்டுள்ளன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இவ்வாய்வானது, வாசகர்களுக்குப் பெண்ணியச் சிந்தனையைப் பற்றிய விழிப்புணர்வு வழங்குவது மட்டுமின்றி, பெண்களைத் துச்சமாக எண்ணும் ஆண்களுக்கும் சமுதாயத்தினருக்கும் பெண்கள் குடும்ப வாழ்வில் ஆண்களுக்கு சமத்துவம் பெற்றவர்கள் என்ற படிப்பினை ஏற்படுத்தும் நோக்கத்தையும் கொண்டது. மேலும், மலேசியச் சிறுகதைகளில் உள்ள பெண்ணியச் சிந்தனையை

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


ஆய்வு செய்யவும் இவ்வாய்வு வாசகர்களுக்கு உந்துதல் சக்தியாக விளங்கும் என ஆய்வாளர் என்கிறார். பெண்களின் பெருமையை மக்கள் உணர வேண்டும் என்பதும் ஆய்வாளரின் நோக்கமாகும். தொடர்ந்து, இவ்வாய்வானது பிற ஆய்வாளர்களுக்குப் பெண்ணியச் சிந்தனையைப் பற்றிய தொடராய்வினை மேற்கொள்ள ஒரு மேற்கோளாகவும் அமையும் என்று ஆய்வாளர் நம்புகின்றார்.

## 1.5 **ஆய்வின் நோக்கம்**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இந்த ஆய்வின் நோக்கமானது,

**1.** கோ.புண்ணியவானின் சிறுகதைகளில் பெண்ணியச் சித்தரிப்பை அடையாளம் காணுதல்.

**2.** கோ.புண்ணியவானின் சிறுகதைகளில் பெண்ணியப் போராட்டங்களைப் பகுத்தாய்தல்.

**3.** கோ.புண்ணியவான் சிறுகதைகளில் பெண்ணியம் அடைந்த வெற்றிகளை விளக்குதல்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


1.6 **ஆய்வு வினா**

i. கோ.புண்ணியவானின் சிறுகதைகள் எவ்வித பெண்ணியச் சித்தரிப்பைக் கொண்டுள்ளன**?**

ii. கோ.புண்ணியவானின் சிறுகதைகளில் பெண்ணியப் போராட்டங்கள் யாவை**?**

iii. கோ.புண்ணியவான் சிறுகதைகளில் பெண்ணிய வெற்றிகள் யாவை**?**

a. **ஆய்வின் எல்லை**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

ஆய்வாளர் கோ.புண்ணியவானின் மூன்று சிறுகதைத் தொகுப்புகளான சிறை**,** நிஜம்**,** எதிர்வினைகள் ஆகியவற்றை ஆய்வு செய்துள்ளார். இந்த மூன்று நூல்கள் 48 சிறுகதைகளை உள்ளடக்கியுள்ளன. அம்மூன்று நூல்களின் விவரத்தைக் கீழ்க்கண்ட அட்டவணையில் காணலாம்.

இப்பெண்ணியச் சிந்தனை ஆய்வில், ஆய்வாளர் குறிப்பாகச் சமூகவியல் நோக்கில் மலேசியப் பெண்களின் வாழ்க்கை முறையின் தொடர்ச்சியில் அவர்களின் பங்கினையும் ஆய்வு செய்துள்ளார். கோ.புண்ணியவானின் சிறுகதைகளில் பெண்களின் பிரச்சனைகள் ஆழமாகவும் விரிவாகவும் பேசப்பட்டிருந்தாலும்**,** இந்த ஆய்வில் பெண்களின் பங்கினை மட்டும் ஆய்வாளர்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


குறிப்பிட்டுள்ளார். இவ்வாய்வின் மூலம் வெளிப்படுத்தப்படும் கருத்துகள் மக்களின் மனதைப் புண்படுத்தும் நோக்கம் கொண்டவையல்ல, மாறாக, பெண்ணலத்தை மேம்படுத்த வேண்டும் என்பதே ஆய்வாளரின் எண்ணம்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**அட்டவணை 1.2:**

*கோ.புண்ணியவான் சிறுகதைத் தொகுப்புகளிலிருந்து ஆய்வுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதைகளின் பட்டியல்*

| **எண்** | **சிறுகதைத் தொகுப்பு** | **சிறுகதையின் பெயர்** | **ஆண்டு** |
|---|---|---|---|
| **1** | | அக்கா | 1999 |
| **2** | | நெஞ்சே உன் ஆசை என்ன? | 1999 |
| **3** | | அம்மா | 1999 |
| **4** | நிஜம் | எலிகளை விழுங்கும பாம்புகள் | 1999 |
| **5** | | இனியொரு விதி செய்வேன் | 1999 |
| **6** | | குப்புச்சியும் கோழிகளும் | 1999 |
| **7** | | நிஜம் | 1999 |
| **8** | | சிறை | 2004 |
| **9** | சிறை | மண் நேசம் | 2004 |
| **10** | | உறவு | 2004 |
| **11** | | புர்வாண்டி | 2004 |
| **12** | சிறை | கருவிழி | 2004 |
| **13** | | எதிர்வினைகள் | 2011 |
| **14** | | நூலாம்படை | 2011 |
| **15** | எதிர்வினைகள் | ஐம்பது ரூபாய் கூலிக்கான துணை நடிகை ????? | 2011 |
| **16** | | துறவு | 2011 |
| **17** | | ஆயக்கொட்டா | 2011 |

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.8 ஆய்வின் சான்றாதாரம்

இவ்வாய்விற்கு முதன்மைச் சான்றாதரங்களும் துணைமைச் சான்றாதாரங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

### 1.8.1 முதன்மைச் சான்றாதாரம்

இவ்வாய்வுக்குக் களமாக அமைகின்ற கோ.புண்ணியவானின் மூன்று சிறுகதைத் தொகுப்புகள் *நிஜம், எதிர்வினைகள், சிறை* ஆகியவையும் பெண்ணியம் சார்ந்த மூலமும் அவற்றிற்கான உரைகளும் ஆய்வின் முதன்மைச் சான்றாதாரங்களாக அமைகின்றன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

### 1.8.2 துணைமைச் சான்றாதாரம்

கோ.புண்ணியவான் படைப்புகள் குறித்தும் சிறுகதை குறித்தும் பெண்ணியம் குறித்தும் எழுந்த ஆய்வு நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், திறனாய்வுக் கட்டுரைகள்,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


நூல்கள், சிறுகதைத் தொகுப்புகள், ஆய்வேடுகள், இதழ்கள், ஆகியன இவ்வாய்வுக்குத் துணைமைச் சான்றாதாரங்களாக அமைகின்றன.

## 1.9 கலைச்சொல் விளக்கம்

கலைச்சொல் விளக்கம் எனப்படுவது ஓர் ஆய்வின் தலைப்பை விளங்கச் செய்வதாகும். இது ஆய்வின் அடிப்படையில் தலைப்பை விளக்குதல் அல்லது அளவிடுதல் எனலாம். ஆய்வின் தலைப்பு விளக்கப்படுவதற்குக் காரணம், ஒரு சிக்கலை எளிதில் அடையாளம் கண்டு கொள்ள முடியும் என ஆய்வாளர் கருதுகிறார். இந்த ஆய்வின் தலைப்பு 'கோ.புண்ணியவான் சிறுகதைகளின் பெண்ணியம்' என்பதாகும். இத்தலைப்பில் இரண்டு வெவ்வேறு விஷயங்களைக் காணலாம். ஒன்று பெண்ணியம், மற்றொன்று சிறுகதைகள்.

### 1.9.1 பெண்ணியம்

பெமினிசம் (*feminism*) எனும் ஆங்கிலச் சொல்லின் அடிச்சொல் இலத்தின் மொழியின் 'பெமினா' ஆகும். பெமினா என்னும் சொல் பெண் என்னும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


பொருளைக் கொண்டது. பெமினிசம் என்னும் இச்சொல்லின் தமிழ் இணைச்சொல்லே பெண்ணியம். அத்துடனில்லாமல், பெண்ணிலைவாதம், பெண் நிலை ஏற்பு, மகளிரியல், பெண் நலக்கொள்கை என்ற சொற்களாலும் அழைக்கப்பட்டு வருகிறது, இருப்பினும், பெண்ணியம் என்ற சொல்லே நடப்பில் நிலைபெற்றுவிட்டது. பெண்ணியம் என்னும் சொல்லின் பொருள் பெண்மைக்குரிய இயல்புகளை உடையவள் என்பதாகும் (ரெங்கம்மாள்.இரா & வாசுகி.சி, 2005).

பெண்ணியம் எனப்படுவது பெண்களின் எல்லாச் சிக்கல்களையும் புரிந்துகொண்டு, அவற்றைக் களைய எழுந்த ஓர் இயக்கமாகும். பெண்களைத் தாழ்வுபடுத்தும் சமூக, அரசியல், பொருளாதார நடைமுறைகள், கட்டமைப்புகள் மற்றும் சமத்துவமின்மையை எதிர்க்கும், கவனப்படுத்தும் சமூக, கலாச்சார, அரசியல் இயக்கங்களின் செயற்பாடுகள், கோட்பாடுகள் ஆகியவற்றின் தொகுப்பாகும். ஆண், பெண் சமத்துவத்தில் கவனம் செலுத்தும் கோட்பாடாகவும் இது வரையறுக்கப்படுவதுண்டு. பெண்ணியத்தை வரையறுப்பதே ஒரு சிக்கலான செயல். பெண்ணியத்திற்கான எல்லைகளை வரையறுப்பதில் பெண்ணியவாதிகளிடையே கூட கருத்து வேறுபாடுகள் உண்டு.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இப்பெண்ணியச் சிந்தனைக் கொண்ட பெண்களின் உரிமைக்கான இயக்கம் 1840இல் தொடங்கப்பட்டாலும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில்தான் பெண்ணியச் சிந்தனை தீவிரம் பெற்றது. முதலில், பெண்களுக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும் என்பதற்காக இவ்வியக்கம்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


எழுந்தது. பெண்ணியம் எனப்படுவது ஆண்களைப் போல் பெண்களுக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. பல தரப்பினர்களால் பல்வேறு விளக்கம் வழங்கப்பட்டாலும், இந்தப் பெண்ணியத்தை இரு பாலருக்கும் சம உரிமை என்றே குறிப்பிடலாம். சுருங்கக் கூறின், ஆண்களும் பெண்களும் சமம். ஆகவே, பெண்கள் யாருக்கும் எந்தச் சூழலிலும் அடிமை அல்ல என ஆய்வாளர் கூறுகிறார். மேலும், பெண்கள் ஒதுக்கப்படக்கூடாது என்றும் ஆய்வாளர் வலியுறுத்துகின்றார்.

இப்பெண் விடுதலை இயக்கம் ஐரோப்பிய நாடுகளில் 16ஆம் நூற்றாண்டில் தொடங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, 20ஆம் நூற்றாண்டில் திறமை வாய்ந்த பெண் தலைவர்கள் உருவாக்கினர். மேலும், மக்கள் மத்தியில் சிறந்த வரவேற்பையும் பெற்றனர். பெண்ணுரிமை சார்ந்த பல இயக்கங்களும் அனைத்துலக ரீதியில் தொடங்கப்பட்டன. ஆரம்பக் காலக்கட்டத்தில், இந்த இயக்கங்கள் யாவும் அரசியல் சிக்கல்களுக்கு மட்டும் முக்கியத்துவம் வழங்கின. நாளடைவில், வெவ்வேறு சிக்கல்களுக்கும் குரல் எழுப்ப ஆரம்பித்தன. இதன் தொடர்ச்சியாக, பெண்ணியமும் வளர ஆரம்பித்தது. 'எலேய்ன் சோவ்வால்தெர்' என்பவர் பெண்ணிய இயக்கத்திற்கு நன்கு பரீட்சயமானவர் எனலாம்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தமிழ்ச்சமுதாயத்தில் பெண்ணியம் என்று கூறும்பொழுது, சங்க கால நூலான தொல்காப்பியத்தின் 206வது பொருளதிகாரப் பாடல் பெண்ணின் குணநலன்களை உயர்த்திக் கூறுகிறது (தமிழண்ணல். 2008).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


'செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்
அறிவும் அருமையும் பெண்பாலன'

அக்காலப் பெண்டிர் செறிவு, நிறைவு, செம்மை, ஒழுங்குற செப்புதல், அறிவு, அருமை ஆகிய பெண்ணிற்குரிய தகுதிகளை அமைந்தவர்களாக இருந்தாகக் கூறி, தொல்காப்பியம் பெண்ணியத்தைப் போற்றுகின்றது. அத்துடனில்லாமல், சிலப்பதிகாரமானது, கண்ணகியைப் பாட்டுடையத் தலைவியாக்கி, அவளின் வீரத்தையும் பெண்ணியத்தையும் வழக்குரை காதையின் வழி வெளிப்படுத்துகின்றது. இக்காவியம் முழுமையும் கண்ணகி எனும் பெண்ணின் பெண்ணியம் சித்தரிக்கப்படுகின்றது. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த பாரதியாரும் பெண்ணியத்தைப் போற்றினார்.

'வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போம்
என்ற விந்தை மனிதர் தலைகவிழ வேண்டும்'
(பாரதியார் கவிதைகள், 2011)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இக்கவிதை வரிகளின் வழி, பாரதி பெண்ணியச் சிந்தனையை அன்றே விதைத்துவிட்டார் என்பதை அறியலாம். மேலும், பெண்ணலம் பேணும் தனது சிந்தனைகளைப் 'புதுமைப் பெண்', 'பெண்மை', 'பெண்கள் விடுதலைக் கும்பி', பெண் விடுதலை' என்னும் கவிதைகளிலும் பாடியுள்ளார். இக்கருத்துகளின் வழி, பெண்ணியம் என்பது கல்வெட்டுத் தொடங்கி கணினி வரை ஏதோ ஒரு வகையில் பேசப்படுகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


எனவே, இத்தகைய இப்பெண்ணியச் சிந்தனைத் தாக்கத்தால், தமிழ்ப்பெண்கள் அனைத்துத் துறையிலும் வளர்ந்து கொண்டிருந்தாலும் சடங்கு, சம்பிரதாயம், சமுதாய நெறிமுறைகள், பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், ஆணாதிக்கம், வன்முறை, பாலியல் கொடுமைகள், பாலின வேறுபாடுகள் எனும் பெயரில் பெண்கள் எதிர்கொள்ளும் துன்பங்கள், தொல்லைகள், சவால்கள், மற்றும் சமூகத்தின் எதிர்மறை கண்ணோட்டங்கள் இந்த இருபத்தொன்றாம் நூற்றாண்டிலும் தொடர்கின்றன.

ஆகவே, இவ்வாய்வில் பெண்ணியம் எனப்படுவது பெண்ணலம் பேண சமூகவியல், பொருளியல், அரசியல் மற்றும் கல்வியல் துறைகளின் வழி மேற்கொள்ளப்படும் முயற்சிகள், அணுகுமுறைகள், சிந்தனை ஆக்கங்கள், பரிந்துரைகள் எனப் பொருள் கொள்ளலாம்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

### 1.9.2 சிறுகதை

"சிறுகதை" எனப்படுவது அரை மணியிலிருந்து ஒன்றரை அல்லது இரண்டு மணி நேரத்திற்குள் படித்துணர்தற்குரிய வகையில் உரைநடையில் கூறப்படும் கதை என்கிறார் சிறுகதைக்கு விளக்கம் கூற வந்த சிறுகதையின் தந்தை எனப் போற்றப்படும் ஆலன்போ (*Edger Allan Poe)* (தண்டாயுதம், இரா. 1975).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


சிறுகதையின் அளவைப் பற்றி கூறும்பொழுது, ஹென்றி (*Hendy)* (1991), அது "சிறிய அளவு கொண்ட ஓர் இலக்கிய வடிவம்" என்கின்றார். *ஜே.எஸ்.படுநீ* (1975), "சிறுகதை எனப்படுவது ஒரு குறிப்பிட்ட கதையம்சம் கொண்டது" என்று வரையறுக்கின்றார். 'நுக்ரஹோ நோதோசுசாந்தொ' (*Nugroho Notosusanto*)(1993) "ஒரு சிறுகதை என்பது 5000 சொற்கள் கொண்டவையாகவும், 17 பக்கங்களைக் கொண்டவையாகவும் இருக்கும்" என்று சிறுகதையின் நீளத்தை விவரிக்கின்றார். இருப்பினும், இன்றைய காலத்துக்கு ஏற்ப, தமிழ்ச்சிறுகதையானது ஒரு பக்கம், அரைப்பக்கம், கால் பக்கக் கதையென தன் வடிவத்தை மாற்றிக் கொண்டுள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அதேபோன்று, சிறுகதைக்கு ஒரு கால எல்லை இல்லை என்ற சிந்தனையும் நிலவுகின்றது. ஒருவரது பிறப்பு முதல் இறப்பு வரை சிறுகதையின் காலமாய் இருக்க முடியும் அல்லது ஒருவரின் வாழ்க்கையில், ஒரே நாளில், ஒரு மணியில், சில விநாடிகளில்கூட கதை முடிந்துவிடலாம். சிறுகதை நாவலைப் போன்றே ஒத்திருந்தாலும், அதனைவிட பலமடங்கு வித்தியாசம் உடையதாகும். கதாபாத்திரம், பாத்திரப்படைப்பு ஆகியவை நாவலைவிட ஒரு குறிப்பிட்ட அளவில் மட்டுமே அமைந்திருக்கும். பொதுவாக, சிறுகதைகள் சமகால பிரச்சினைகளை எடுத்துரைக்கும் வண்ணம் அமைந்திருக்கும். சிறுகதையில் உள்ள படிப்பினைகளும் வாசகர்களுக்கு விரைவாகவும் எளிதில் புரியும் வகையிலும் அமைந்திருக்கும். சிறுகதையின் மொழிநடையானது, கதையை வாசித்து எளிதில் உள்வாங்கிக் கொள்ள துணைப்புரியும் என்று ஆய்வாளர் கூறுகின்றார். சிறுகதையில்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


பயன்படுத்தப்படும் கதைபத்திரங்கள், கதையின் ஓட்டம், மொழி ஆகியவை வாசகர்கள் மனதில் பதிய முக்கியப் பங்கு வகிக்கின்றன.

ஆகவே, இவ்வாய்விற்கான 'சிறுகதை' என்னும் கருதுகோளானது தமிழ் இலக்கியத்தின் முன்னணி எழுத்தாளருமான அகிலன் மற்றும் எட்கார் ஆலன் Edgar போரின் கருத்துகளை உள்ளடக்கிய ஒன்றாகும். அகிலன் அவர்கள் சிறுகதையானது ஒரு கால, நீள எனும் கோட்பாட்டுக்கு உட்பட்டு, ஒரு நிகழ்ச்சி, ஒரு வாழ்வியல் பிரச்சனை, ஒரு கதைமாந்தரின் பாத்திரத்தைச் சித்தரிப்பதாகவும், எட்கார் ஆலன் *Edger Allan Poe* போரின் கருத்துப்படி அது ஒரே அமர்வில் வாசிக்கக்கூடியதாக அமைய வேண்டும் என்பதேயாகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.10 **தொகுப்புரை**

இறுதியாக, கோ.புண்ணியவான் சிறுகதைகளில் இடம்பெறும் பெண்ணியச் சிந்தனை மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் ஆற்றல் உள்ளது என்று ஆய்வாளர் கருதுகின்றார். மேலும், இவரது சிறுகதைகள் வாசகர்களுக்கு ஒரு வழிகாட்டியாகவும், வாழ்வியல் பண்புக்கூறுகளின் எடுத்துக்காட்டாகவும் அமையும் எனவும் ஆய்வாளர் கருதுவதால், இக்கதைகள் இந்த ஆய்வுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi